**வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 - 2020**

வேளாண்மைத்துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் 2020 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 சனவரி 17 ஆம் திகதிய 5873–எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கையின் பட்டியல் 2, பிரிவு II, பீ 3 உடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், விவசாய அமைச்சு வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் நிறைவேற்றல் மற்றும் அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அனுராதபுரம், மட்டக்களப்பு, மொனராகலை, மாத்தளை மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள சிறுநிலவுடைமை விவசாயிகள் மற்றும் விவசாய வணிகங்களின் விவசாய உற்பத்தித்திறனை அதிகரித்தல், சந்தை நுழைவை மேம்படுத்துதல் மற்றும் பெறுமதிச் சேர்க்கையை முன்னேற்றுதல் என்பவற்றிற்கு ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மேலும், சிறுநிலவுடைமை விவசாயிகளுக்கு போட்டிமிக்கதும் சந்தைவாய்ப்புள்ளதுமான பொருட்களை உற்பத்தி செய்வதற்கும் சந்தைத் தேவைப்பாட்டிற்கு ஏற்றவகையில் அவர்களது இயலளவை முன்னேற்றி வர்த்தகமயமாக்கலை நோக்கி நகர்வதற்கு ஆதரவளிப்பதற்கான நடவடிக்கைகளை வேளாண்மைத் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - பகுதி 02 இன் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிதியளித்தல் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயமான ரூபா 9,175.88 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 642.87 மில்லியன் தொகை சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 சனவரி 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| **இல.** | **விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் பதில்கள்** | **கணக்காய்வாளரின் பரிந்துரைகள்** |
|---|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2016 யூன் 10 ஆம் திகதிய 02/2016 ஆம் இலக்க சுற்றறிக்கை | செயற்திட்டத்தினால் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப் படவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் அல்லது செயற்திட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவால் கணக்காய்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் 2019 மார்ச் 15 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தலின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வழிகாட்டல் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப் படவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்க வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்**

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் 5 கூறுகளின் கீழ் பின்வரும் பெயர்களில் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

(அ) விவசாயி பயிற்சி மற்றும் இயலளவை கட்டியெழுப்புதல்
(ஆ) நவீன விவசாய தொழில்நுட்ப பூங்காக்கள்
(இ) உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு
(ஈ) பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை ஆதரவு
(உ) செயற்திட்ட முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

| | கூறுகள் | செயற்பாடுகள் | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | --------- | -------------------- | -------------------- | ---------------------- | ------------------------- |
| (அ) | நவீன விவசாய தொழில்நுட்ப பூங்காக்கள் | சர்வதேச சேவை வழங்குநரின் ஆட்சேர்ப்பு | கூறுகளின் பௌதீக செயன்முன்னேற்றம் ஆண்டின் இறுதியில் எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுக்குப் பின்நோக்கியிருந்தது. இதன் விளைவாக செயற்திட்டத்தின் அனைத்து செயற்பாடுகளினதும் சுமூகமான தொழிற்பாடு பாதிக்கப்பட்டு தாமதமடைந்திருந்தது. | பதிலளிக்கப் படவில்லை. | சர்வதேச சேவை வழங்குநருடன் முறையான ஒருங்கிணைப்பை பேண வேண்டியதுடன் தாமதமான நடவடிக்கைகளை மேற்கொள்ள உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பகுப்பாய்வு மற்றும் கொள்கை ஆலோசனை ஆதரவு | கொள்கை அபிவிருத்தி | ரூபா 69.55 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 08 ஒப்பந்தங்கள் ஆலோசனை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 55.5 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், அவை தொடர்பான இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப் படவில்லை. | வேலைகளை பூர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினரை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தால் அமுல்ப்படுத்தப்படும் செயற்பாடுகளை நெருக்கமாக மேற்பார்வை செய்தல் அவசியமாகும். |
| (இ) | விவசாயி பயிற்சி மற்றும் இயலளவை கட்டியெழுப்புதல் | விவசாயி பயிற்சி | தோட்ட நிர்மாண ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன்னர் நவீன விவசாய தொழில்நுட்பப் பூங்காக்களில் விவசாய நடவடிக்கைகள் தொடர்பான பயிற்சி நடாத்தப்பட்டதால் 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட ரூபா 45.76 மில்லியன் தொகையான செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்தது. | பதிலளிக்கப் படவில்லை. | செயற்திட்டத்தின் நோக்கெல்லை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஈ) | உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்பு | உற்பத்தி மற்றும் சந்தை உட்கட்டமைப்புக்களை தரமுயர்த்துதல் மற்றும் புனரமைத்தல் | செயற்திட்டக் கூறுகளால் மேவுகை செய்யப்படாத சர்வதேச சேவை வழங்குநர் ஒருவரை நியமனம் செய்வதிலுள்ள தாமதங்கள் காரணமாக ஆரம்ப செயற்திட்டப் பகுதிகளின் கீழ் கிராமப்புற வீதிகள், கிராமப்புற தொட்டிகள், விவசாய கிணறுகள் மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளை புனரமைத்தல் தொடர்பாக ஐ.அ.டொலர் 6.15 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது, | பதிலளிக்கப் படவில்லை. | செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்ளும் பொருட்டு செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சர்வதேச சேவை வழங்கல் உடன்படிக்கை ஆரம்பிக்கப்பட்ட 4 மாதங்களுக்குள் சாத்தியவள ஆய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ் அறிக்கை 02 மாத தாமதத்துடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதற்குத் தேவையான அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நான்கு நீண்டகால முக்கிய ஆலோசனையாளர்கள் வேலைக்கமர்த்தப்பட வேண்டிய போதிலும் முக்கிய ஆலோசனையாளர் ஒருவர் மாத்திரமே நியமனம் செய்யப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 183.33 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது | பதிலளிக்கப் படவில்லை. | சேவை வழங்குநரால் அமுல்ப்படுத்தப்படும் நடவடிக்கைகள் தொடர்பாக நெருக்கமான மேற்பார்வை அவசியமாகும். |
| (ஆ) | பயனாளி தகவல் முறைமை ஒன்றின் வடிவமைப்பு, அபிவிருத்தி, நிறுவுதல் மற்றும் பராமரிப்புக்கான ஒப்பந்தம் 2018 ஒக்தோபர் 28 இல் ரூபா 8.25 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்டு 2019 ஆம் ஆண்டில் ரூபா 1.65 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப் படவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் தேவைப்பாடுகளுக்கு இணங்க ஒப்பந்ததாரரை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கமநல வணிகப் பாடசாலை பயிற்சி மற்றும் கமநல உற்பத்தியாளர் சங்கப் பயிற்சிக்கான ஒப்பந்தங்கள் ரூபா 101 மில்லியன் மற்றும் ரூபா 46 மில்லியன் கிரயத்தில் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தேவையான அளவில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந் நிலைமையை பொருட்படுத்தாமல், 2020 சனவரியில் விவசாயி வணிகப் பாடசாலை பயிற்சிக்காக ஒப்பந்ததாரருடன் ரூபா 36 மில்லியன் கிரயத்தில் இன்னொரு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. | பதிலளிக்கப் படவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கையின் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு சேவை வழங்குநரிற்கு வழிகாட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | ஊவா மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் பிரகாரம் ரூபா 127 மில்லியன் பெறுமதியான 05 ஒப்பந்தங்களின் நிர்மாண வேலைகள் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் உரிய வேலைகள் 2020 திசெம்பர் 31 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப் படவில்லை. | மேலதிக கிரயத்தை தவிர்க்கும் பொருட்டு தாமதங்களை குறைத்து ஒப்பந்த வேலைகள் உரிய நேரத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | ஆரம்ப செயற்திட்டத்தில் பெறுமதி சங்கிலி பகுப்பாய்வு மற்றும் சந்தை மதிப்பீட்டிற்கான ஒப்பந்தம் ரூபா 5.86 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2019 சனவரி 01 இல் ஆலோசனை நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2019 மார்ச் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் கணக்காய்வுத் திகதியான 2021 சனவரி 31 வரையிலும் உரிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் அது தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 3.51 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. | பதிலளிக்கப் படவில்லை. | ஒப்பந்த உடன்படிக்கைகளின் தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு ஆலோசனை நிறுவனங்களிற்கு வழிகாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 கள விஜயம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட முன்மொழிவின் பிரகாரம் முருங்கை பயிர்ச்செய்கைக்காக ரூபா 39 மில்லியன் செலவிடப்பட்டு 2 ஆம் ஆண்டிலிருந்து ஏக்கர் ஒன்றிற்கு 18,000 கிலோகிராம் விளைச்சலைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் 2021 பெப்ரவரி 03 இல் மொனராகலை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சிப்பின் பிரகாரம், செடிகளின் மெதுவான வளர்ச்சி மற்றும் பயிரிடலிற்கான சேதம் காரணமாக எதிர்பார்த்த விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவானது செயற்பாடுகள் மீது முறையான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை பொறிமுறையைப் பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இச்செயற்திட்டம் அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் கற்றாளை பயிர்ச்செய்கைகளிற்காக ரூபா 47.33 மில்லியன் தொகையை செலவிட்டிருந்த போதிலும் 2020 பெப்ரவரியில் நிலவிய வறட்சி மற்றும் 2021 பெப்ரவரியில் நிலவிய கடும் மழை காரணமாக எதிர்பார்த்த விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்ட கண்காணிப்பு பிரிவானது செயற்பாடுகள் மீது முறையான கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை பொறிமுறையைப் பின்பற்ற வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மாத்தளை மற்றும் மொனராகலை மாகாண செயற்திட்ட முகாமைத்துவ அலுவலகங்களுக்கு கையளிப்பதற்காக ரூபா 141 மில்லியனிற்கு விவசாய இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட போதிலும் விவசாயிகளை தெரிவுசெய்யும் செயன்முறை பூர்த்தி செய்யப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் போது 7 மாதங்களுக்கும் மேலாக அவை விளைவற்றிருந்தன. | பதிலளிக்கப்படவில்லை. | ஒப்பந்தங்களை வழங்குவதற்கு முன்னர் விவசாயிகளின் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உண்மையான தேவைப்பாடுகள் சரியாக மதிப்பிடப்பட வேண்டும். |

**3.4 குறைப்பயன்பாடுடைய வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ஐரோப்பிய ஒன்றியத்திடமிருந்து யூரோ 25 மில்லியன் தொகையான மானியங்களைப் பெறும் நோக்கத்துடன் இச் செயற்திட்டமானது 2020 ஆம் ஆண்டில் பதுளை, கிளிநொச்சி, அம்பாறை மற்றும் வவுனியா உட்பட அதன் புவியியல் மேவுகையை விரிவுபடுத்தியிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 10 வரையிலும் அது பெறப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கொய்யா மற்றும் வாழைப்பழ ஏற்றுமதி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக ரூபா 3.6 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2021 பெப்ரவரி 10 வரையிலும் கொய்யா அல்லது வாழைப்பழம் எதுவும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | ஒப்பந்தத் தேவைப்பாடுகளுக்கு இணங்க சேவை வழங்குநரை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | செயற்திட்ட காலப்பகுதியின் போது அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கிய பிரதான பெறுகைத் திட்டத்தை செயற்திட்டம் தயாரித்திருக்கவில்லை. இதன் விளைவாக, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட விவசாயி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் ஆண்டு முழுவதும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன | பதிலளிக்கப்படவில்லை. | செயற்திட்டம் பிரதான பெறுகைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் |